முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1575

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.01.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. பிரணவக்குடில் படைத்த அரசனே
   பிரணவ சித்திமிகு ராஜனே
   சரவணச் சுடரேற்றி உலகோர்க்கு
   சற்குருவாய் அருளுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் தை மாதம் 07 ம் நாள், 21.01.2024, ஞாயிற்றுக்கிழமை)
   வரமென அரங்கன் உன் திருவடி பற்றி
   வையகத்தில் வணங்கும் மக்களெல்லாம்
3. மக்களெல்லாம் என் அருள் பலத்தோடு
   மண்ணுலகில் ஞானிகளாக மாற்றம் பெறுவர்
   ஆக்கமுடன் அரங்கன் தர்மத்தை காத்து
   இனிதே வந்து அவரவரும் தர்மவான்களாக
4. வரமென அரங்கனின் ஆசி தீட்சைவழி
   வையகத்தில் முருகப் பெருமான்
   என் தலைமை தரக்கூடிய
   முழுமையான ஞான ஆட்சிக்காலத்தை அடைவர்
5. வகைபட அரங்கனைத் தொடர்ந்துவர
   வையகத்தில் மாற்றம் செய்து
   திறம் பட ஞானிகளாக
   தெரிவிப்பேன் அரங்கன் தொண்டர் படைகளாக
6. ஆகவே உலகமெங்கும் மாற்றம் கூடி
   அற்புதம் அரங்கன் தர்மத்தாலும்
   கொள்கையாலும் நடந்தேறும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–